# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | |
|---|---|---|
| Case No | : STC.1202/2019 | Date:07.03.2024 |
| Deposition of Witness for | : பு.சா.1 | |
| Name | : புஷ்பா | |

**(சாட்சி மனுவின்மீது திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

**குறுக்கு விசாரணை**

**1.** கடந்த 17.12.2018ம் தேதி நான் சுந்தரம் பைனான்சில் வாங்கியிருந்த வீட்டு கடனுக்கு ஜி.ஆர். பாரத் கேஸ் கம்பெனி கணக்கிலிருந்து ரூ.22,24,656/- தொகை மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஏற்கனவே என்னுடைய நிலம் ரூ.25,00,000/- விற்பனை செய்து அந்த தொகையில் ரூ.10,00,000/- ஐ நிலத்தை வாங்கிய இ.கே.பழனிசாமி என்பவரின் வங்கி கணக்கிலிருந்து நான் கூறியதின் பேரில் மேற்படி பாரத் கேஸ் கம்பெனிக்கு அனுப்பினேன். மீதி ரூ.15,00,000/- ஐ தொகையாக எதிரி நவீனிடம் கொடுத்தேன். அந்த தொகையை தான் மேற்படி என்னுடைய வீட்டு கடன் கணக்கிற்கு பாரத் கேஸ் கம்பெனி கணக்கிலிருந்து அனுப்பினார்கள்.

2. மேற்படி ரூ.25,00,000/- தொகையை மேற்படி வீட்டு கடன் கணக்கிற்கு பணம் அவர்கள் செலுத்துவதற்கு முன்பே நான் கொடுத்தேனா என்றால் ஆமாம். மேற்கண்டவாறு 25 லட்சம் கொடுத்த விவரத்தை என்னுடைய புகாரிலோ, அறிவிப்பிலோ, முதல் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி 25 லட்சம் தொகை திருப்பி தரவில்லை என்று எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டதா என்றால் இல்லை. அதன்பிறகு வாங்கிய பணத்தை திருப்பி தராததால்தான் பிரச்சனை ஏற்பட்டது. மேற்படி நிலத்தை விற்பனை செய்தது சம்பந்தமாகவோ ரூ.25 லட்சம் எதிரி நவீனுக்கு கொடுத்தது

சம்பந்தமாகவோ ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் அவ்வாறு நிலம் விற்பனை செய்து அதன்மூலம் ரூ.25 லட்சம் எதிரி நவீனுக்கு கொடுத்திருந்தால் அது சம்பந்தமான ஆவணங்களை தாக்கல்செய்திருப்பேன் என்றும் அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை என்றும் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. மேற்படி 22 லட்சம் கடன் செலுத்தியபிறகு தான் எனக்கு ரூ.40 லட்சம் சுந்தரம் பைனான்சில் கிடைத்தது என்றால் சரிதான். மேற்படி 40 லட்சம் எனக்கு கிடைத்த பிறகுதான் எதிரி நவீனுக்கு ரூ.10 லட்சம் கொடுத்தேனா என்றால் ஆமாம். மேலும் ரமேஷ்க்கும் ரூ.8 லட்சம் கொடுத்தேன் என்றால் சரிதான். ஏற்கனவே நவீன் கொடுத்த பணத்தை தான் நான் திரும்ப கொடுத்தேன் என்றால் சரியல்ல. எதிரி எனக்கு நேரடையாக காசோலை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

ஒப்பம். புஷ்பா

ஒப்பம். S.R. பாபு,
நீதித்துறை நடுவர் எண்.1
சங்ககிரி.